மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மணி 2 ★ 24-7-60 ★ ஒலி 38

10,000 தம்பிமார்களோடு

அண்ணா-சம்பத்

நீதிமன்றத்திற்கு வந்த மாட்சி!



அண்ணா வாழ்க! எங்கள் அண்ணா வாழ்க! என முழக்கமிட்டனர்!

எழும்பூர் நீதிமன்றம்

என்றும் காணாத காட்சி!

சென்னை நகர மக்கள் ஜூலை 18-ம் தேதி அதிகாலையிலிருந்தே, மிக, மிக சுறு சுறுப்பாகவும், விறு விறுப்பாகவும் தோற்ற மளித்தார்கள். காலையிலிருந்தே பல பகுதி களிலிருந்து கழகத் தோழர்கள் எழும்பூர் பிரதம மாகாண நீதிபதி யின் நிதி மன்றத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்!

அன்று காலை 9 மணிக்கே நிதி மன்றத்திற்குள் சாரை சாரையாக மக்கள் வந்த வண்ணமிருந்தார்கள்!

காரணம் என்ன? ஏன் இப்படி அன்று மட்டும் எழும்பூர் நீதிமன்றத்திற்கு அத்துணை மக்கள் வந்து கூடினார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் மாநாட்டிற்கோ, பொதுக் கூட்டத்திற்கோ மக்கள் 'செல்வது போன்று நீதி மன்றத்திற்கு சென்னைத் தோழர்கள் வந்து சேர்ந்தார்கள்.

எழும்பூர் நீதி மன்றத்தில் எத்தனையோ அரசியல் தலைவர்களுடைய வழக்குகள் நடைபெற்றிருக்கிறது! எத்தனையோ பரபரப்பான வழக்குகள் நடைபெற்றிருக்கிறது! ஆனால் அன்று போல் எழும்பூர் நீதி மன்றம் அவ்வள பெரும் மக்கள் வெள்ளத்தைக் கண்டதில்லை!

அப்படி இவ்வளவு பெருந்திரள் கூட என்ன காரணம் அப்படி என்ன அங்கே அற்புத காரியம் அன்று நடை பெற்றது. என்று நீங்கள் எண்ணலாம்.

திராவிட மக்களின் உள்ளத்திலே குடி கொண்ட உழைப்பின் சிகரம், அறிவுலக மேதை, தென்னகத்தின்—தென்னக மக்களின் உயர்விற்காக அயராது உழைத்து வரும் அன்புத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மீதும்—

கொங்கு நாட்டு வேங்கை கொள்கை முழக்கம் செய்து தென்னக மெங்கும் விடுதலை உணர்ச்சியை ஊட்டி வட நாட்டு ஏகாதிபத்திய எத்தர்களின் சதிகளை அம்பலமாக்கி வரும் அஞ்சா நெஞ்சன் இந்தி எதிர்ப்புப் போர்க் குழுத் தலைவர் ஈ. வெ.கி. சம்பத் அவர்கள் மீதும் தொடரப் பட்ட வழக்கு விசாரணையைக் காணவே அன்று அவ்வளவு பெரிய மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது!

அறிஞர் அண்ணா அவர்களும், சொல்லின் செல்வர் ஈ. வெ, கி. சம்பத் அவர்களும் மத்திய சர்க்கார் ஊழியர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி சென்ற 9-7-60-ல் பொதுக் கூட்டத்தில் பேசி தூண்டியதாகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது!

இந்த வழக்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டத்தின் 5-ம் பிரிவின் கீழ் போலீசாரால் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். இந்த வழக்கைக் காணவே சென்னை மக்கள் அன்று நீதி மன்றத்தில் கூடி யிருந்தார்கள்!

சரியாக 10-50க்கு இந்த வழக்கை கவனிப்பதற்காக நமது பொதுச் செயலாளர் இரா, நெடுஞ்செழியன், கம்பீரப் பார்வையுடனும், வீர நடையுடன் நீதிமன்ற மண்டபத்திற்குள் நுழைந்தார்! அவரைப் பின் தொடர்ந்து துணைப் பொதுச் செயலாளர் உழைப்பின் சிகரம் திரு என், வி, நடராசன், இந்தி எதிர்ப்பு மாநாட்டின் செயலாள

(4ம் பக்கம் பார்க்க)

வழக்கு 30ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டது!

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 24—7—60 ஒலி 38

அண்ணாவின் ஆணை பிறந்தது! எங்கே உங்கள் பட்டியல்?

"இந்திப் போர்க் களத்தில் குதித்து மாண்டொழிவதற்கான வீரர்களின் பட்டியலை உடனே தயாரிக்க வேண்டும்' என்று அறப்போர் தளபதி திருவாளர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் த[illegible]மையில் இயங்கி வரும் அறப்போராட்டக் குழு நம[illegible] ஆணையிட்டிருக்கிறது! அத்தோடு உண்டியல் மூலம் நி[illegible]த் திரட்டி அனுப்பும்படியும் கட்டளையிட்டிருக்கிறது!

"போராட்டம் எப்போது, போராட்டம் எப்போது" என்று துடி துடிப்போடு கேட்ட துடிப்புள்ள இளைஞர்களே! போராட்டம் வந்து விட்டது! புறப்படுங்கள்! புறப்படுங்கள்!

"ஆணையிடுங்கள் அண்ணா, ஆணையிடுங்கள் அண்ணா—அற்ப குணம் படைத்தவர்களை ஒழித்துக் கட்டுகிறோம்" என்று முழக்கமிட்ட இளைஞர்களே! கட்டளை பிறந்து விட்டது! பட்டியலைத் தாருங்கள்! உயிரைப் பணயம் வைத்துப்போராடும் அறப்போர் வீரர்களின் பட்டியலைத் தாருங்கள்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இத்திங்கள் இறுதியில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற இருக்கிறது அந்த மாநாட்டிலே நம்முடைய பெயர்களைப் படித்து படித்து மகி[illegible] வேண்டும்! அவருடைய உள்ளம் பூரிக்க வேண்[illegible] எனக்குக் கிடைத்த தம்பிகள் இந்த உலகில் [illegible] யாருக்குமே கிடைத்திருக்க முடியாது" என்று அண்ணாவின் உள்ளம் நினைத்து, நினைத்து மகிழ வேண்டும்!

அவருடைய உள்ளம் மகிழ்ந்தால், அவருடைய உதட்டிலே புன்னகை அரும்பும்!

அந்தப் புன்னகை[illegible]ர்த்துப் பார்த்து—அரும்பிக் கிடக்கும் அந்தப் [illegible]ன்னகையிலே வீரம் சொரிந்துக் கிடக்கும் காட்சியைக் கண்டு கண்டு—அந்தக் காட்சியால், கதி கலங்கியோடும் எதிரிகளின் விலா எலும்பு முறிந்து விழும் மாட்சியைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதை விட நமக்கு வேறு என்ன செல்வம் வேண்டி இருக்கிறது!

நமது அரும் பெரும் தலைவர் அண்ணா அவர்களோடு பேசுவதற்கு, அவருடைய அன்பைப் பெறுவதற்கு, அவருடைய புன் சிரிப்பைக் கண்டு மகிழ்வதற்கு எத்தனையோ பேர்கள் தவம் கிடக்கிறார்கள்! 'நமக்கிருக்கும் தலைவர்களுக்கு அந்த ஆற்றல் இல்லையே, அந்தத் திறனில்லையே மக்களை ஈர்க்கும் அந்த காந்த சக்தியில்லையே' என்று எத்தனையோ பேர்கள் பெருங் கவலைப் பட்டுக் கிடக்கிறார்கள்!

"அந்தக் குடும்பத்தைப் பாருங்கள் எத்தனை பாசம், எத்தனை அன்பு—தலைவரை 'அண்ணா' என்று அழைக்கிறார்கள் — தலைவரோ, தம்பிகள்—அதுவும் "என் தம்பிகள்" என்று ஆசையோடு அழைக்கிறார்! இந்த பாசம், இந்த நேசம் நம்மிடமில்லையே!" என்று ஏங்கி ஏங்கித் தவித்திடும் துர்பாக்கியசாலிகள் இங்கு எத்தனையோ பேர்களுண்டு!

எதிரிகளும் புகழும் அந்தப் பெருமைக் குரிய பெருந்தகையாளர் நம்மைப் புகழ வேண்டுமே—அதுவும்—"வீரர்காள், வீரர்காள்! வாள் எடுக்காது, வேல் எடுக்காது, வீரத்தை நெஞ்சிலே ஏந்தி வரும்—வீரர்காள், வீரர்காள்—வெல்க, உன் அறப்போர் வெல்க" என்று வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் பெருமை நமக்குக் கிடைக்க வேண்டுமே!

நாம் தரப் போகும் அறப் போர் வீரர்களின் பட்டியலைப் பார்த்து எத்தனை முறை மகிழ்வார்கள் தெரியுமா? எத்தனை முறை படித்துப் படித்து பெருமையோடு பேசுவார்கள் தெரியுமா?

இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே நமது அண்ணா தலைமை வகித்துப் பேசுகின்ற நேரத்திலே—நாம் தருகின்ற பட்டியல் அவரது கையிலே இருக்கும்—அப்போது அந்தப் பட்டியலைக் காட்டி—"என் தம்பி சம்பத் தன்னந் தனியாக இருக்கிறான், நாதியற்றவன், நாலு பேரு இல்லாதவன் என்றெண்ணி கூச்சல் போட்டு, குழப்பம் விளைவித்து உட்கார வைத்த வெறியர்களே! இதோ பாருங்கள்! என் கரத்திலே இருக்கின்ற பட்டியலைப் பாருங்கள்!"

"என் தம்பி சம்பத் ஆணையிட்டான்—"போர், போர்" என்று முழங்கினான்! மூன்று இலட்சம் பேர், நான்கு இலட்சம் பேர்—அவன் பின்னாலே கொரில்லா படைகளைப் போல் உயிரையும் விட காத்து நிற்கிறார்கள்! அவன் கேட்கிறான்—ஆமாம், என் தம்பி சம்பத்து தான் கேட்கிறான் —வெறியர்களே! பதில் சொல்லுங்கள்!" என்று டெல்லி ஏகாதிபத்திய வெறியர்களைப் பார்த்து முழக்கமிடுவார்கள்!

நமது அண்ணாவின் கரத்திலே இருக்கின்ற பட்டியல் பந்துவின் உள்ளத்தைக் குடையும், நேருவின் அன்றியிலே கடும் ஜுரத்தைக் கிளப்பும்! இதற்கான வேலையை இன்று முதலே நாம் செய்ய வேண்டும்!

கழகத் தோழர்களே! செயலாளர்களே! மாவட்டப் பிரதிநிதிகளே! பொதுக் குழு உறுப்பினர்களே! எல்லோரும் கிளம்புங்கள்! ஒரு கையிலே பேனாவையும் பேப்பரையும் எடுத்துக் கொள்ளுங்கள்! மற்றொரு கரத்திலே உண்டியலைத் தூக்கிக் கொள்ளுங்கள்!

வீடு வீடாகச் செல்லுங்கள்! உங்கள் கரத்திலே இருக்கின்ற உண்டியலைக் காட்டி—"அம்மா காசு போடுங்கள், அருந்தமிழைக் காக்க காசு போடுங்கள்" என்று வாய் விட்டுக் கேளுங்கள்!

மற்றொரு கரத்திலே இருக்கிற பேப்பர். பேனாவைக் காட்டி—'அம்மா! தமிழ்த் தாயைக் காக்க உங்கள் தலை மகனைத் தாருங்கள் அவன் தேவை இல்லையென்றால் கடை மகனையாவது தாருங்கள்" என்று உள்ளன்போடு கேளுங்கள்! உங்கள் பட்டியல் நீளும், மூன்று இலட்சம், நான்கு இலட்சம் என்று எண்ணிக்கையும் வளரும்!

'தமிழ் வீரம் இன்னும் செத்து மடியாத மாவீரர்களைக் கொண்டது மதுரை தான்" என்று பெருமை

(நான்காம் பக்கம் பார்க்க)

சென்னையில் மாபெரும் மாநாடு !

பல ஆண்டுகளுக்குப் பின் அறிஞர் அண்ணா தலைமை தாங்கும் மாநாடு இது !

அண்ணாவின் கட்டளையை ஏற்க வீரர்களே ! ஓடி வருக ! ஓடி வருக !

புலவர் பெரு மக்களே! கலைஞர்களே! உங்கள் பங்கு தான் என்ன ?

உலகப் பெருந் தலைவர்களில் ஒருவராய் விளங்கும், அறிவுலக மாணிக்கம் நமது அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இத்திங்கள் 31-ம் நாள் சென்னையில் ஒரு மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற இருக்கிறது!

நமது பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் இம்மாநாட்டைத் துவக்கி வைத்து சிறப்பிக்க இருக்கின்றார்கள்!

போராட்டக் குழுத் தலைவர் திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தான் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து– வீர மறவர்களை யெல்லாம் வரவேற்று உணர்ச்சி விருந்தளிக்க இருக்கிறார்! கே. ஏ. மதியழகன் தான் செயலாளர்!

இத்தனையும் சொல்லுவதை விட, பல ஆண்டு காலத்திற்கு பின்பு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகிக்கும் மாநாடு இது தான் என்று சொல்லுவதொன்றே போதும்–இந்த மாநாட்டின் சிறப்பை விளக்க!

இந்தியத் துணைக் கண்டம் பிறந்த காலம் தொட்டு இது வரை காணாத ஒரு பெரும் நிகழ்ச்சியை, ஒரு பெரும் புரட்சியை இந்த மாநாட்டின் மூலம் இந்தத் துணைக் கண்டம் காண இருக்கிறது!

"இதென்ன மாநாடு—ஆவடிச் சந்தைக்கடை மாநாட்டிற்கு ஈடாமோ" என்று பெரிய அமைச்சர் முதல் சின்ன அமைச்சர்கள் வரையில் பேசக் கூடும்! காமராஜரும் பேசுவார், கக்கனும் பேசுவார்! இவர்களுக்கும் கொஞ்சம் நடுவிலே இருக்கும் கொங்கு நாட்டு அமைச்சரும் பேசக் கூடும்! அவசரக்காரர்கள் தான் இப்படி ஆருடம் கணிக்கக் கூடும்! அரசியலைப் பற்றிப்புரியாதவர்கள் எதையும் தான் பேசுவார்கள்! ஆனால் காலம் அவர்களுக்கு இதை நிச்சயமாக உணர்த்தும்!

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கிற இந்த மாநாடு அடுக்கு மொழி பேச்சிற்காகக் கூட்டப்பட்ட மாநாடு என்று எவராவது கருதினால் அந்த ஏமாந்த சோணகிரிகளைப் பற்றி நாம் பரிதாபம் தான் கொள்ள வேண்டும்!

இந்த மாநாடு இந்த நாட்டின் வாழ்விற்காக, இந்த நாட்டின் விடுதலைக்காக, இந்த நாட்டின் தாய் மொழியைக் காப்பதற்காக நடத்தப்படும் மாநாடாகும்!

இது மாநாடல்ல, இது மாநாடல்ல—உங்கள் நாட்டைக் காக்க உங்கள் ஆட்சியைக் காக்க, உங்கள் அதிகாரத்தைக் காக்க—உங்களை அந்நிய ஏகாதிபத்திய வெறியர்களிடமிருந்து காக்க—உங்கள் இராணுவ தளபதி திம்மையா, எப்படி பட்டாளத்தைக் கூட்டி வைத்து—உபதேசம் செய்து, வீர உரையாற்றி—"டாங்கிப் படைகளை கிழக்குப் பக்கமாகச் செலுத்த வேண்டும்–பீரங்கிப் படைகளை வட கிழக்குப் பக்கமாக நிறுத்த வேண்டும்—பாராசூட் படைகளைத் தடுத்து தடுத்துப் பழக்கப்பட்ட 14 வது சேனை இம்பால் முனையில் இருக்க வேண்டும்—எட்டாவது சேனையை மணிப்பூரில் நிறுத்த வேண்டும்—லார்ட்வேவல பிரபுவிடம் பழக்கப்பட்ட பத்தாவது நேவிப் படையை கல்கத்தா துறைமுகத்தில் வைக்க வேண்டும்–வீ.டு. விமானப்படையை பர்மா கரை பக்கமாகச் செலுத்தி ஹாங்காங் நகரில் நடக்கும் சதிவேலைகளை வேவு பார்க்கச் சொல்ல வேண்டும்" என்று எப்படி கட்டளை இடுவாரோ—அதே போல் எங்கள் இராணுவ தளபதி எங்களுக்குக் கட்டளை பிறக்கும், பயிற்சி அளிக்கும் போர் முகாம் தான் இந்த மாநாடாகும்!

"அடிபட்டு, அடிபட்டு, மிதிபட்டு, மிதிபட்டு, மண்டை உடைபட்டு, உடைப்பட்டு பழக்கப்பட்ட சென்னை வீரர்களை தம்பி கருணாநிதியிடம் ஒப்புவித்து சென்னை நகரைப் பாதுகாக்கச் சொல்லுங்கள்—உணர்ச்சி வேகத்தால் எதையும் செய்ய அஞ்சாத மதுரை மாவட்டப் படையை, நமது நாவலரிடம் ஒப்புவித்து கொஞ்சம் பக்குவத்தை அளித்து, கொஞ்சம் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ளச் சொல்லுங்கள்! தஞ்சை மாவட்டப்படை, தஞ்சை மாவட்டத்திலேயே இருக்கட்டும், அதை இளங்கோவே பார்த்துக் கொள்ளட்டும்! திருச்சிப் படையைப் பிரித்து கொஞ்சம் இராமனாதபுரம் மாவட்டத்திற்கும் அனுப்பி வையுங்கள்! தூத்துக்குடி படைக்கு கொஞ்சம் கட்டுப்பாட்டை விதியுங்கள் புது இராமம் நடந்து விட்டதாக பழி சுமத்தும் நிலையை உண்டாக்காதீர்கள்!" என்று உங்கள் திம்மையாவைப் போல எங்கள் தளபதி கட்டளையிடும் முகாம் தான் இந்த மாநாடு!

உங்கள் தளபதி எப்படி இராணுவ வீரர்களையெல்லாம் கூட்டி இப்படிச் சுட வேண்டும், அப்படிச் சுட வேண்டும்! என்று சொல்லுவாரோ, அதே போல்—எங்கள் தளபதி அறிஞர் அண்ணா இலட்சக் கணக்கான அறப்போர் வீரர்களை அழைத்து பேருரை ஆற்றுவார்கள்! "துப்பாக்கியால் சுட்டால் ஓடாதீர்கள், ஒளியாதீர்கள்! அப்படியே படுத்து விடுங்கள்! கை போனாலும் கால்கள் போனாலும் கண்களை இழந்தாலும் ஆத்திரப்படாதீர்கள்–போலீசாரை திருப்பித் தாக்காதீர்கள்–கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகள் தான் நமக்கு முக்கியம்" என்ற அறிவுரையை வழங்குவதற்காகத்தான் இந்த மாநாடு நடைபெற இருக்கிறது!

இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக இந்த மாநாடு எல்லா வீரர்களையும் அழைக்கிறது! மொழிப்பற்றுடையவர்கள், இனப்பற்றுடையவர்கள், நாட்டுப் பற்றுடையவர்கள், அனைவரும் கலந்து கொண்டு அறப் போராட்டத்தில் பங்கு கொண்டு மொழியைக் காக்க, நாட்டைக்காக்க இந்த மாநாடு அழைக்கிறது!

இந்தியைப் பொறுத்த வரையில், நாட்டின் விடுதலையைப் பொறுத்தவரை இது தான் கடைசி மாநாடாக இருக்கும் இருக்க வேண்டும்! இந்த மாநாட்டோடு இந்தி ஒழிய வேண்டும் நாடும் விடுதலை பெற வேண்டும்!

ஒரு போராட்டம் நடைபெறுமானால் அதில் சில பயங்கர நிகழ்ச்சிகள், திடுக்கிடும் சம்பவங்கள் நடைபெறக் கூடும்! ஆயிரக்கணக்கானவர்கள் செத்து மடியக்கூடும், ஆயிரக் கணக்கானவர்கள் படுகாயமடையக்கூடும், ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் வாழ்க்கையை, சுக போகங்களை இழக்கக் கூடும், இலட்சக்கணக்கானவர்கள் சிறையிலே வாடி சித்திரவதை படக்கூடும்! இத்தனை தியாகங்கள் புரிவதும், இத்தனை பேர்களுடைய வாழ்க்கை பலியாவதும் ஒரு நல்ல பலனை காண்பதற்கு தான்! நல்ல பலன் என்றால் சிறந்[illegible] பயனைப் பெறு[illegible] பொருள்!

சி[illegible] காரியங்களுக்காக, அற்ப விஷயங்களுக்காக பலருடைய உயிர்களை, பலருடைய வாழ்க்கையை நாசப்படுத்துவது கூடாது!

சிலர், உயிரோடு வாழ்வதற்கும், கட்சியை வளர்ப்பதற்கும் போராட்டங்கள் நடத்துவதுண்டு! அது நமக்குத் தேவையில்லை! போராட்டத்தால் நாம் வளரவில்லை, வளரவு மாட்டோம்! நாம் கொள்கையால் வளர்ந்தவர்கள்! இலட்சியத்தால் நிலைத்து நிற்பவர்கள்!

நம்முடைய போராட்டம் இறுதி முடிவைக் காணும் போராட்டமாகவே இருக்கும், இருக்க வேண்டும்!

மனித உயிர் மிக மேன்மையான உயிர்—நாட்டின் நல்வாழ்வுக்காக தேவைப்படும் உயிர் என்பதை நாம் ஒரு போதும் மறக்க மாட்டோம்!

இந்தப் போராட்டத்தில் சிந்தப்படுகிற ஒவ்வொரு துளி ரத்தமும், பலி தரப்படுகின்ற ஒவ்வொரு உயிரும் நாட்டின் நல்வாழ்வோடு கலந்திருக்கின்றன! எனவே நாம் எதற்கும் அஞ்சாது போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்!

உயிரை துச்சமென மதித்து வாழும் இளைஞர்களே! வருக! வருக!

"தூய தமிழ் வேண்டும், தூய தமிழ் வேண்டும்" என்று முழக்கமிட்டு வரும் புலவர் பெருமக்களே! வருக! வருக!

"கலை, கலை" என்று கர்ஜனை புரியும் கலைஞர்களே! வருக, வருக!

கருத்து வேற்றுமையை மறந்து கொள்கை வேற்றுமையை மறந்து தமிழைக் காக்க, தமிழகத்தைக் காக்க வருக! வருக! வந்து அண்ணாவின் ஆணையைப் பெற்று களத்தில் குதித்து வெற்றியைத் தேடித் தருக! வெற்றியைத் தேடித் தருக!

முக்கிய அறிவிப்பு !

மத்திய சர்க்காரின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக பல சிற்றூர்களுக்கு சென்ற இதழே இன்னும் கிடைக்கவில்லை என்பதாலும், மலர் வேலைகளை கவனிக்க வேண்டும் என்பதாலும் இந்த இதழ் 4 பக்கங்களுடன் வெளி வருகிறது. அடுத்து 7-8-60 தேதி இதழ் மலராக வெளிவரும்!

விற்பனையாளர்கள் பில் பாக்கிகள் அனைத்தையும் அனுப்புவதோடு மலருக்கும் முன்பணம் அனுப்பி ஒத்துழைக்க வேண்டுகிறோம்!

தேவையான இதழ்களுக்கு முன் கூட்டியே தயவு செய்து எழுதி விட வேண்டும்!

நிர்வாகி

மாலைமணி

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 MALAIMANI விலை 7 காசு Phone 83285 இலங்கையில் 10 சதம்

(இரண்டாம் பக்கம் பார்க்க)

போடு பேசும் மதுரை மாவட்ட வீரர்களே! உங்கள் மதுரை மாவட்டம் எத்தனை ஆயிரம் வீரர்களை அனுப்பப் போகிறது?"எங்கள் முத்து எங்கள் முத்து" என்று பேசும்வீரர்களே! அந்தமுத்து உங்கள் வீடு நோக்கி வருவார்! அவர் தரப் போகின்ற மரண சாசன ஓலையில் கையெழுத்திடுங்கள்!

"தீரர்கள் வாழ்ந்த இடம் திருச்சி தான், தினவெடுக்கும் தோள்களைப் பெற்ற இடம் திருச்சிதான்" என்று புகழ் பாடி வந்தவர்களே! உங்கள் மாவட்டத்தின் பங்கு என்ன? "அம்பில் தருமலிங்கம் இருக்கிருர்-அவர் ஆயிரம் ஆயிரம் வீரர் களைத் தருவார்" ஒன்று கூறுகிறீர்கள்! அப்படி யென்ருல் அவர் தரப் போகின்ற சாவோலையில் கையெழுத்திடுங்கள்!

"நாட்டுக்கு நல்ல தலைவரைத் தந்த இடம் எங்கள்—நாவலர் நெடுஞ்செழியன். தமிழ் பெருங்கடல் அன்பழகன், பிறந்த இடம்-கல்லக்குடி தளபதி-ஆறுமாதக் கடுங் காவலை துச்சமென மதித்த எங்கள் கருணாநிதி பிறந்த இடம் இதுதான்! தஞ்சையாருக்கும் தலை குனிந்ததில்லை, இனியும் குனியாது" என்று முழக்கமிடும் தஞ்சை வீரர்களே! உங்கள் பங்கு என்ன? பத்தாயிரமா? இருபதாயிரமா?

"கொங்கு நாடு—தமிழப் புகழ் தங்கும் நாடு! கோழை நாடல்ல! மங்காத வீரம் படைத்த—எங்கள் சிங்காரத் தமிழ்த் தளபதி சம்பத் பிறந்த ஊர்—மானம் காத்து நீற்கும் மறவர் குலப் பெருமகன் எங்கள் மதியழன் பிறந்த ஊர்! களத்திலே மடியும் முதல் படை எங்கள் படை!" என்று முழக்கமிடும் கோவை மக்கள் தரப் போகும் பட்டியலின் நீளமென்ன?

செங்கற்பட்டு மாவட்டம்! "பேசாதே! நீ தன் மானத்தோடு வாழ்வதற்கே, நீ திராவிடனுய் இருப்பதற்கே எங்கள் மாவட்டம் தான் காரணம்! காஞ்சி இல்லா விட்டால், நீ ஏது, உன் நாடு தான் ஏது?" உண்மை தான் உண்மை தான்! சி. வி. எம். அண்ணாமலையின் பேச்சைக் கேட்டாலே நம் வாய் அடைக்கத் தான் செய்கிறது!

எதற்கும் அஞ்சாத மாணவர்ப் படையை, அறிவுப் படையாக்கி நமது பாசறைக்கு அனுப்பி வைத்துக் கொண்டே இருக்கும் அண்ணாமலை நகரைப் பெற்ற தென்னாற்காடு மாவட்டம்-அது தான், வில்லாளனும், இளம் வழுதியும் அயராது உழைக்கும்—செயல் வீரர் கோவிந்தசாமியால் பெருமை பெற்ற மாவட்டம் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை தத்தம் செய்துத் தரகாத்திருக்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை!

"நெல்லை மாவட்டம்—தூத்துக்குடி தங்கம் தே. வி. கே. சாமி பிறந்த மாவட்டம்—கொள்கை வீரர் சிவசாமி வாழும் மாவட்டமாயிற்றே! எத்தனை ஆயிரம், எத்தனை ஆயிரம் என்று கேட்டால்-அவர்கள் பதில் சொல்லவில்லை "மும்முனைப் போராட்டத்தைப் பார்த்தாயா" என்று கண் ஜாடை காட்டுகிளுர்கள்!

"வடபுலத்து மக்களை வாட்டி வதைப்போம்" என்று வடாற்காடு மாவட்டம் முழங்குகிறது! சிற்றரசு பிறந்த ஊர் ஆயிற்றே! ஏ, எல். சி. கிருஷ்ணசாமியும், முல்லை சத்தியும் இருக்கும் போது நமக்கேன் அந்தக் கவலை!

இராமனுதபுரம் இரத்த வெள்ளத்தில் மிதக்கத் தயங்காது, ஒரு நாளும் தயங்காது!

இப்படி ஒவ்வொரு மாவட்டமும் போட்டியிட்டுக் கொண்டு மரணத்திற்கு அஞ்சாத மாவீர்களை இலட்சம், இலட்சமாக அனுப்பி வைத்து—நமது தாயை, தமிழ் மொழியைக் காத்து, திராவிடத்தை விடுவித்துத் தர வேண்டும்!

திரு. E. V. K. சம்பத் M.P.

அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிற

"Sunday Times"

வாசித்தீர்களா ?

1 ஆண்டு சந்தா ரூ. 8-50 ● 6 மாத சந்தா ரூ 4-50

Sunday Times,
69, Peter's Road, Madras-6.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ரும், தென்னகம் ஆசிரியருமான கே ஏ, மதியழகன் ஆகியோர் வந்தார்கள்!

சரியாக பதினொரு மணியடித்ததும் மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது!

ஒய்யாரப் பார்வையுடனும், சிங்க நடையுடனும் கம்பீரமாக ராணுவத் தளபதி போன்று தோழர் சம்பத் நீதி மன்றத்திற்குள் நுழைந்தார்! அவருக்குப் பின் அன்பே உருவான முகத்துடனும் புன் சிரிப்பும் காந்த சக்தியைப் போன்று யாவரையும் வசீகரம் செய்யும் அன்பு பார்வையுடனும் நமதுநாவுக்கரசர் அறிஞர் அண்ணு அவர்கள் வந்தார்கள்!

பிரதம மாகாண நீதிமன்ற நீதிபதி திரு சதாசிவம் அவர்கள் நமது தலைவர்களை நோக்கி தனித் தனியாக நீங்கள் குற்றவாளிகளா என்று கேட்டார்!

நமது தலைவர்கள் இருவரும் நாங்கள்குற்றவாளிகளல்ல என்று கெம்பீரத்துடன் கூறினுர்கள்!

வழக்கை இம்மாதம் 30-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது! தலைவர்கள் இருவரும் ஏறிச் சென்ற கார் புறப்படும் போது "அண்ணு வாழ்க! சம்பத் வாழ்க! நாவலர் வாழ்க என்ற முழக்கம் விண்ணதிர முழக்கினுர்கள்!

இந்த வழக்கை கவனிப்பதற்கு ஏராளமான இயக்கப் பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

மாலைமணி படைக்கும்

இந்தி எதிர்ப்பு
அறப்போர் சிறப்பிதழ் !

அறிஞர் அண்ணு, நாவலர் நெடுஞ்செழியன்.
ஈ. வி. கே. சம்பத், கலைஞர் கருணாநிதி,
கே. ஏ. மதியழகன், அன்பழகன்,
ஆகிய பெரும் தலைவர்கள் எழுதும் தனிக் கட்டுரைகள் !

மாநாட்டு நிகழ்ச்சிகள், முழு பேச்சுகள் !
ஏராளமான மாநாட்டுப் புகைப்படங்கள் !
கண்ணைப்பறிக்கும் இருவண்ண முகப்பு !

விலை 30 காசு

7-8-60ம் தேதி வெளிவருகிறது ! எல்லா ஊர்களுக்கும் 3-8-60ம் தேதியே கிடைத்துவிடும் !

தேவையான இதழ்களுக்கு முன் டணத்துடன் 30-7-60ம் தேதிக்குள் எழுத வேண்டுகிறேம் !

முன் பணமின்றி வரும் கடிதங்களும், குறிப்பிட்ட தேதிக்குப் பின் வரும் கடிதங்களும், கண்டிப்பாக கவனிக்கப்படமாட்டாது !

நிர்வாகி,
மாலைமணி, சென்னை-14.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.